செ.வெ.எண்: 172 நாள்: 15.03.2021

**மாற்றுத்திறனாளிகளுக்கான தேர்தல் விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

சட்டமன்ற தேர்தலையொட்டி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேர்தல் விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.03.2021) துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் 06.04.2021 அன்று நடைபெறவுள்ளது. பொதுமக்கள் அனைவரும் தேர்தலில் தவறாது வாக்களிக்கும் வகையில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு பகுதிகளில் தேர்தல் விழிப்புணர்வு பேரணிகள், மனித சங்கிலி, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேர்தல் விழிப்புணர்வு வாகனம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

100 சதவீத வாக்குப்பதிவை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கமும் துவக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் மாற்றுத்திறனாளிகளிடம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு வாகனம் புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக சென்று மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிக்கும் வகையில் தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளது.

எனவே மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் தேர்தலில் தவறாமல் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் கதிர்வேலு, தேர்தல் வட்டாட்சியர் கலைமணி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

------------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**